**தம்புள்ள பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 01 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூலை 02 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தம்புள்ள பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 மாகாண சபை உறுப்பினர் நிதி உதவிகளின் கீழ் கிபிஸ்ஸ மகிந்தாராமைக்கு பொருள் உதவி பெற்றுக் கொடுப்பதற்குரிய தொடர்பான கடன்பட்டோர் தொகை ரூபா 49,040 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 மற்றும் 2017 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட 5 நிர்மாணங்களுடன் தொடர்பான பூர்த்தியாக்கப்பட்ட வேலைகளின் பெறுமதியாகிய ரூபா. 9,161,563 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் கொள்வனவுகளில் மூலதனமாக்கப்படாத ரூபா. 86,882 பெறுமதியான 22 விடயங்கள் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியின் மூலம் மோட்டார் கிரேடருக்காக பெறப்பட்ட தொகைக்கான வருடாந்த வட்டி மூலதனமாக்கப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் மேலதிகம் ரூபா. 176,411 இனால் மேலதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2017 ஆம் ஆண்டில் பொது நிதியின் கீழ் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த எனினும் 2018 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த ரூபா. 3,561,718 பெறுமதியான 5 நிர்மாணங்கள் கடன் கொடுத்தோராகக் குறிப்பிடப்பட்டிருந்ததன் காரணமாக கடன் கொடுத்தோர் கணக்கு அத்தொகையினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 215,800 பெறுமதியான காரியாலய உபகரணங்கள் மூலதனமாக்கப்படாததன் காரணமாக காரியாலய உபகரணக் கணக்கின் மீதி அத்தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) 2017 ஆம் ஆண்டின் ஜுன் மாதம் தொடக்கம் திசெம்பர் வரை கிடைக்கப் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் மதிப்பிடப்பட்டு கணக்கிடப்படாமை காரணமாக வருடத்தின் வருமானம் ரூபா. 6,508,280 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 98,612,027 கூட்டுத்தொகையான 7 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டதுடன் அவதானிக்கப்பட்ட வேறுபாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 50,229,971 ஆக இருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 10 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 32,761,396 ஆக இருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யாமல் காணப்படும் மீதி ரூபா 24,724,665 ஆக இருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,785,278 ஆக இருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யாமல் காணப்படும் ரூபா 7,731,117 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 2,197,706 தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங் களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) 178(2)அ | | கேள்வி கோரலின் போது அறிவித்தல் உள்ளடக்கப்பட வேண்டிய சகல விபரங்கள் இல்லாமல் பிரதேச சபையால் பொருட் கொள்வனவு கேள்வி விளம்பரம் வெளியிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | ரூபா 398,024 தொகையான நிறுத்தி வைக்கப்பட்ட தொகை செயற்திட்டம் பூர்த்தி செய்த திகதி முதல் இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும், அரச |

| | | | |
|---|---|---|---|
| | | | வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| i. | நி.பி 137 | 16,200 | உறுதிச்சீட்டுக்கள் அங்கீகரிக்கப்படாமல் விடுமுறை தினச் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| ii. | நி.பி 343 | - | அடியிதழ்சேர் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| iii. | நி.பி 137 | - | முச்சக்கர வண்டியின் ஓடட்க் குறிப்புக்கள் 2017 செப்தம்பர் 3 ஆந் திகதியின் பின்னர் எழுதப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | சபைக்குச் சொந்தமான 06 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1991 மார்ச் 26 ஆந் திகதி மத்திய மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கை இலக்கம் 3/91 | - | பிரதேச சபையின் 4 மாதங்கள் எதிர்காலத் திட்டங்களை சமர்ப்பித்திருக்கவில்லை. |

**1.3.5.2 வரித் தேவைப்பாடுகளுகளுடன் இணங்காமை**

பெறுமதி சேர் வரியாக சேர்க்கப்பட்ட 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 2,605,010 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 17,139,149 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,205,630 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 684,566 மற்றும் ரூபா 4,122,169 தொகையாக இரண்டு சேமிப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இப்பணத்தை கூடிய வட்டி வீதத்தில் வருமானம் பெற்றுக்கொள்ளப்படக் கூடிய வகையில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 138-1-001-2-5396699 ஆம் இலக்க மக்கள் வங்கிக் கணக்கு 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி மூடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சபையின் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 31,313 ஆன மீதியொன்று காணப்பட்டது.

(இ) 138-1-001-2-6704 ஆம் இலக்க மக்கள் வங்கிக் கணக்கு ஓராண்டு காலமாக செயற்படாமல் இருந்ததுடன் சபையின் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 13,450 ஆன மேலதிக பற்றொன்று காணப்பட்டது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரி மற்றும் வரி | 2,500,000 | 2,677,500 | 2,550,500 | 127,000 | - | 1,301,500 | 704,056 | 597,443 |
| வாடகை | 1,717,500 | 2,070,000 | 1,926,667 | 1,187,493 | 1,700,000 | 1,720,820 | 1,720,820 | 1,044,160 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 14,000,000 | 15,814,792 | 14,892,765 | 922,027 | 11,150,000 | 14,210,548 | 14,078,960 | 155,538 |
| ஏனைய வருமானம் | 17,000,000 | 12,722,230 | 2,965,450 | 9,756,780 | 16,000,000 | 18,493,367 | 7,228,575 | 11,264,792 |
| மொத்தம் | 35,217,500 | 33,284,522 | 22,335,382 | 11,993,300 | 28,850,000 | 35,726,235 | 23,732,411 | 13,061,933 |

### 2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை அறவிடப்பட வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மீதி முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 766,489 ஆல் அதிகரித்திருந்தது.

(ஆ) விளம்பர அறிவித்தல் பதாகைகளிலிருந்து கட்டணங்கள் அறவிடுவதற்காக பிரதேச சபையால் உப விதி பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரிசோதனையின் போது ரூபா 130,500 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) மீய்வாண்டின் இறுதி திகதி வரை சபை அதிகாரப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஹொட்டெல்களின் எண்ணிக்கை 48 ஆக இருந்த போதிலும் 28 ஹொட்டெல்களிலிருந்து மாத்திரம் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணங்களை (வருமானத்தில் 0.3 சதவீதம் ரூபா 13,109,098 தொகை

அறவிடப்பட்டிருந்தது. சுற்றுலா ஹொட்டெல்களிலிருந்து கட்டணங்களை அறவிடும் போது கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் அடிப்படையாகக் கொண்டு கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும் 05 ஹொட்டெல்களிலிருந்து மாத்திரம் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகளின் அடிப்படையாகக் கொண்டு கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாத ஏனைய வருமானமாக இனங்காணப்பட்டு கணக்கிடப்பட்டிருந்த ரூபா 1,153,547 ஆன மீதியொன்ம் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாத மோட்டார் வாகன நிறுத்துமிடங்களின் வாடகை கணக்கில் ரூபா 1,044,160 ஆன மீதியை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

வருடக் கணக்காக இருந்து வரும் கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திரங்க கட்டணங்களான ரூபா 22,950 உட்பட மீளாய்வாண்டின் இறுதி வரை கிடைக்க வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 102,112 ஆக இருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 376,500 ஆக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான காரணங்களுக்காகள பிறப்பிக்கப்பட வேண்டிய உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப வதிகளின் பிரகாரம் சபையினால் நிறவேற்றப்பட்டிருந்த செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்ற தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படாதிருப்பதுடன் 2017 ஆம் ஆண்டினுள் மீள் சுழற்சிக்குட்படுத்தக்கூடிய கழிவுகளை மாத்திரம் ஒன்று சேர்ப்பதற்காக

ரொட்டவெவ வாராந்த சந்தையைப் பயன்படுத்தி ஒரு பிரிவு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் கழிவுகளை வேறாக்குவதற்கான போதிய இடவசதிகளின்மை, கழிவுகளை வேறாக்கி அப்புறப்படுத்துவதற்கான போதிய வாகன வசதிகளின்மை, திண்மக் கழிவுகளை கொள்வனவு செய்வதற்கான கொள்வனவாளர்களை இனங்கண்டு கொள்வதிலுள்ள சிரமங்கள் மற்றும் தொழிலாளர்கள் போதியளவு காணப்படாமை ஆகிய காரணங்களால் அப்பிரிவின் செயற்பாடுகளை முன்னெடுப்பது சிரமமாகவிருந்தது.

**(ஈ) சுற்றாடல் சிக்கல்கள்**

பிரதேச சபை மற்றும் தம்புள்ள மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் சேரும் கழிவுப்பொருட்கள் பிரதேச சபைக்குரிய திகம்பத்தன பிரதேசத்தில் வெளியேற்றப்படுவதுடன் காட்டு ானைகள் உட்பட ஏனைய மிருகங்கள் கழிவுகளுடன் பொலித்தீனை உணவாக உட்கொள்வதால் அவற்றின் உயிர்களுக்கும் ஆபத்தொன்று காணப்பட்டது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேரான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திராமையால் நீண்டகாலத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டி ருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 1996 - 2003 வருடங்களில் தேசிய இயந்திரக் கூட்டுத்தாபனத்திடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரங்களுக்கான செலுத்த வேண்டிய வாடகை ரூபா. 292,069 தொகையினை செலுத்தாமை மீது தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பிற்கமைவாக அத்தொகை செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் வழக்கறிஞர் கட்டணம் மற்றும் வேறும் செலவுகளாக ரூபா. 76,300 சபை செலுத்தியிருந்தது. எனினும் சபையினால் தகவல்கள் வழங்கப்படாமை மற்றும் வழக்கிற்கு சமூகமளிக்காமை ஆகிய காரணங்களால் சபைக்கு அனுகூலமாகவிருந்த சந்தர்ப்பம் தவற விடப்பட்டிருந்தது.

(ஆ) நீர் வடிகாலமைப்புத் திட்டமொன்றின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த குழாய்க் கிணறுகளுக்கான வருடாந்த பராமரிப்புச் செலவாக ஒரு கிணற்றிற்கு ரூபா. 200 அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதித் தினம் வரையில் ரூபா. 774,700 தொகை சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. இத் தொகையினை அறவிடுவதற்கான முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படாதிருந்ததுடன் இந்நிலுவையில் 20 வருடங்களுக்கும் மேற்பட்ட மீதிகளும் காணப்பட்டன. இக்குழாய்க் கிணறுகளின் பழுதுபார்த்தலுக்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த இரண்டு ஊழியர்கள் சபையில் கடமை புரிவதுடன் ஆவணப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க அளவு திருத்தத்திற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. சபையின் அதிகாரிகளால் இந்த ஊழியர்களை ஈடுபடுத்தி நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபைக்குரிய இனாமலுவ விளையாட்டரங்கு காணிக்குள் அத்துமீறிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் பதவியணியின் 16 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ஆ) வெவ்வேறு காரணங்களினால் 23 சபை ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 334,884 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டு 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் 03 உத்தியோகத்தர்களின் சேவையை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

கெப் வண்டியொன்றை ரூபா 89,100 செலவில் இயந்திர பொறியியல் காரியாலயத்தினூடாக திருத்தப்பட்டு 2015 திசெம்பர் 04 ஆம் திகதி எடுத்து வருகின்ற சந்தர்ப்பத்தில் இடையில் என்ஜின் தீப்பிடித்ததன் காரணமாக மீண்டும் திருத்தியமைப்பதற்காக ரூபா. 132,309 இற்கான சிட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான கொடுப்பனவு 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

மோட்டார் வாகனங்கள் மற்றும் இழுவை வண்டில்கள் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 4,329,350 பெறுமதியான மூன்று வாகனங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கெப் வண்டி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**3.5.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் பொருளிருப்பு உருப்படிகளில் ரூபா 156,380 ஆன பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.4 வாகனப் பயன்பாடு**

கெப் வண்டியொன்று பகை பரிசோதனையில் சித்தியடையாமையால் 2015 ஆம் ஆண்டிலிருந்து வருமான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.6 இனங்காணப்பட்ட நட்டம்

2015 ஏப்ரல் 13 ஆந் திகதி விபத்திற்குட்பட்டமை தொடர்பாக நி.பி 104 பரிசோதன அறிக்கையின் பிரகாரம் ரூபா 7,987,612 தொகையான நட்டத்தை அறவிட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிலும் அந்நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.7 பெறுகைகள்

### 3.7.1 பெறுகைத் திட்டம்

சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 ஒப்பந்த நிர்வாகம்

மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூபா 500,000 நிதிஏற்பாட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த கும்புக்கந்தஹேன மயான வீதியின் பாலம் நிர்மாணத்தின் போது மதிப்பீட்டின் பிரகாரம் கொங்கிரீட் தளத்தின் தடிப்பு 100 mm – 125 mm இற்கு இடைப்பட்டிருக்கையில் 125 mm என கருதி ரூபா 51,498 சிட்டையிடப்பட்டிருந்தது. பாலத்தின் இருபகுதியின் கைவேலி முறையான உறுதியான வகையில் பொருத்தப்படாதிருந்த பேரிலும் இவ்வேலை விடயத்திற்காக ரூபா 46,000 பட்டியலிடப்பட்டிருந்தது.

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(ஆ) 29 செலவின விடயங்கள் மற்றும் உப செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,029,000 ஆன கூட்டுப்பெறுமதியுடைய நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமும் மேறகொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 61 செலவின விடயங்கள் மற்றும் உப செலவின விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கிடையே 23% முதல் 98% சதவீதம் வரையான வீச்சில் விலகல் காணப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்த உத்திரோகத்தர் கணக்காய்வு அவதரிப்புக்களை சபை செயலாளருக்கு வழங்கியிருந்த போதிலும் அக்கணக்காய்வு விசாரணைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 தீர்க்கப்படாத அவதானிப்புக்கள் மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டில் சபைக்கு வழங்கப்பட்ட 02 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வசாரணைகளுககு உட்பட்ட கணக்கிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 6,196,448 ஆக இருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | சொத்துக்கள்/ ஆதனம் | காணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்கள் போதியளவில் இல்லாமை |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | கொள்வனவு மற்றும் வழங்கல் முறையாக பதிவு செய்யத் தவறியமை. |
| (இ) | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் | முறையான வகையில் கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் இனங்காணப்படாமை மற்றும் தீர்வுசெய்தல் முறைப்படுத்தப்படாததன் பேரில் அட்டவணைகளை சமர்ப்பிப்பதற்கு முடியாமை |
| (உ) | ஆளணி முகாமைத்துவம் | வெற்றிடங்களினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (ஊ) | வாகனங்கள் | i விளைவற்ற வாகனங்களை பயன்படுத்துவதற்கோ கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமை<br>ii. வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |